கொள்கையின் பெயர்	நலன் முரண்பாடு கொள்கை
கொள்கையின் உரிமையாளர்	பணிப்பாளர் - மனித வளங்கள் குழு
கொள்கை தினம்	ஜூலை 2018
ஒப்புதல் வழங்கல்	MAS ஆடையகச் சபை
இறுதி மதிப்பாய்வு தினம்	மார்ச் 2025

MAS
CHANGE IS COURAGE

நலன் முரண்பாடு கொள்கை

உள்ளடக்கம்

1.0 **நோக்கம்** 2

2.0 **செயலெல்லை** 2

3.0 **நலன் முரண்பாடு கொள்கை பற்றி புரிந்துகொள்ளுதல்.** 2

4.0 **நலன் முரண்பாடு கொள்கையை கையாளுதல்** 4

5.0 **இணக்கமின்மை** 5

6.0 **பொறுப்பு** 7

7.0 **முக்கிய விதிமுறைகளின் வரைவிளக்கங்கள்** 9

இந்த ஆவணத்தில் அடங்கியுள்ள உரைகள், உருவப்படங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் அனைத்தும் தனியுரிமை உடையவை என்பதுடன், MAS ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் பெறுமதி வாய்ந்த அறிவுசார் சொத்தாகும். இதில் எந்தவொரு பகுதியையும் MAS ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் எழுத்துமூல முன்னனுமதி இல்லாமல் மீள்பதிப்பு அல்லது அனுப்பீடு செய்யவோ அல்லது வேறேதும் வகையில் பரப்புரை செய்யவோ கூடாது. MAS ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் முன்கூட்டிய அதிகாரமளிப்பு பெறப்படுவதோடு, பிரசுரிக்கப்படும் விடயங்களின் மூலாதாரம் குறித்து ஏற்புரையும் வழங்கப்பட்டாலன்றி, சட்டத்தினால் அனுமதிக்கப்படும் அளவுக்கு மாத்திரமே அவை பயன்படுத்தப்படலாம். அதிகாரமளிக்கப்படாத நகல்கள் அல்லது வேறேதும் பாவனைகள் MAS ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் அறிவுசார் சொத்துரிமையின் மீறலாகக் கருதப்படும் என்பதுடன், MAS ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் இது தொடர்பில் தனது உரிமைகளைப் பூரணமாகப் பிரயோகிக்க முடியும்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

கொள்கையின் பெயர்	நலன் முரண்பாடு கொள்கை
கொள்கையின் உரிமையாளர்	பணிப்பாளர் - மனித வளங்கள் குழு
கொள்கை தினம்	ஜூலை 2018
ஒப்புதல் வழங்கல்	MAS ஆடையகச் சபை
இறுதி மதிப்பாய்வு தினம்	மார்ச் 2025

MAS
CHANGE IS COURAGE

1.0 நோக்கம்

1.1 ஒரு பணியாளரின் வணிகத் தீர்ப்பு மற்றும் முடிவுகள் தேவையற்ற தனிப்பட்ட நலன்களால் பாதிக்கப்படாத வகையில் வணிகத்தை நடத்த MAS உறுதிபூண்டுள்ளது.

1.2 MAS இல் ஒரு பணியாளரின் தனிப்பட்ட நலன்கள் அவர்கள் எடுக்கும் முடிவுகளில் செல்வாக்கு செலுத்தினால், செல்வாக்கு செலுத்தப்படகூடியதாக கருதப்பட்டால், செல்வாக்கு செலுத்துவதாக கருதப்பட்டால். கொள்கையின் நோக்கம், நலன்கள் தொடர்பான முரண்பாடுகளைத் தடுக்க அல்லது நிர்வகிப்பதற்கான கொள்கைகளை முன்வைக்க MAS முயல்கின்றது.

2.0 செயலெல்லை

2.1 இந்தக் கொள்கை அனைத்து MAS ஊழியர்கள், ஆலோசகர்கள், பயிற்சியாளர்கள் (Trainees) மற்றும் பயிலுநர்கள் (Interns) ஆகியோருக்கும் பொருந்தும்.

3.0 நலன் முரண்பாடு கொள்கை பற்றி புரிந்துகொள்ளுதல்.

3.1 ஒரு ஊழியர் தனது தனிப்பட்ட நலன்களை MAS இன் நலன்களை காட்டிலும் முன் வைக்கும் போது அவரின் அத்தகைய தனிப்பட்ட நலன்கள், பணியாளரின் வணிகத் தீர்ப்புகள், முடிவுகள் அல்லது செயல்களில் தேவையற்ற தாக்கத்தை ஏற்படுத்தும். அப்போது நலன்கள் தொடர்பான கொள்கை முரண்பாடுகள் எழலாம். இவ்வாறான நிலைமைகளுக்கு செல்வாக்கு செழுத்தும் சந்தர்ப்பங்களின் போது தன்னைப் பற்றிய தனிப்பட்ட நலன்களில், அவரின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய தனிப்பட்ட நபர்களின் தொடர்புகள் செல்வாக்கு செலுத்தக் கூடும்.

3.2 கருத்து முரண்பாட்டை எதிர்கொள்ளும் போது தீர்ப்புகளை வழங்குதல், முடிவுகளை எடுப்பது அல்லது செயல்களை மேற்கொள்வது MASக்கான பணியை புறநிலையாகவும் திறம்படவும் செய்வதை கடினமாக்கலாம்.

3.3 MAS பணியாளர்கள் பணிபுரியும் காலம் என்பது, அவர்கள் MAS நிறுவனத்திற்கு விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் செயல்பட வேண்டிய காலகட்டமாகும்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

3.4 நலன்கள் தொடர்பான முரண்பாடுகளை "தவிர்ப்பது" என்பது, முதலில் நலன்கள் தொடர்பான முரண்பாடுகள் ஏற்படாமல், அல்லது ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த ஒரு பணியாளர் முடிவுகளை அல்லது செயல்களை மேற்கொள்வதை உள்ளடக்குகிறது.

3.5 MAS நலன் முரண்பாடுகளை பரந்த அளவில் வகைப்படுத்துகிறது:

(a) உண்மையான நலன் முரண்பாடுகள் (பணியாளர் நலன் முரண்பாட்டால் தேவையற்ற முறையில் பாதிக்கப்படுகிறார்)

(b) சாத்தியமான நலன் முரண்பாடுகள் (ஊழியர் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இருக்கிறார், அது அவரைத் தேவையற்ற முறையில் பாதிக்கலாம், அதன் மூலம் நலன் தொடர்பான முரண்பாடுகளை ஏற்படுத்தலாம்)

(c) உணரப்பட்ட நலன் முரண்பாடுகள் (பணியாளர் குறிப்பிட்ட முரண்பாட்டை ஏற்படுத்தாதவராக இருப்பினும் இந்த சூழ்நிலையொரு நலன் முரண்பாடு சூழ்நிலையை கொண்டிருப்பார்)

3.6 பொதுவான நலன் தொடர்பான முரண்பாடுகள் ஏற்பட கீழே அட்டவனையில் தரப்பட்டுள்ள காரணங்கள் அமையலாம். ஆனால் அவை மட்டுமே காரணங்களாக அமைய வாய்ப்பில்லை.

முரண்பாடுகளின் வகைகள்	தவிர்க்க வேண்டிய அல்லது நீக்க வேண்டிய விடயங்கள்
(a) உள்ளக முரண்பாடுகளுக்கு மத்தியில் உள்ள முரண்பாடுகள்	பணியிடத்தில் முரண்பாடுகள் ஏற்படுத்தக்கூடிய நெருங்கிய அல்லது தனிப்பட்ட உறவுகள். உதாரணம்: - மேற்பார்வை, ஆட்சேர்ப்பு, (உள்/வெளி ஆட்சேர்ப்புகள் மற்றும் உள் இடமாற்றங்கள் உட்பட) கீழ்நிலை அல்லது கட்டுப்பாட்டு உறவில் (உதாரணம்: MAS பணியாளர்கள் பணிபுரியும் காலம் என்பது, அவர்கள் MAS நிறுவனத்திற்கு விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் செயல்பட வேண்டிய காலகட்டமாகும். - குடும்ப உறுப்பினர்கள் அல்லது நீங்கள் நெருங்கிய தனிப்பட்ட உறவில் உள்ள ஒருவருடன், அதே குழுவில் அல்லது மேற்பார்வை அல்லது கீழ்நிலை மட்டத்தில் பணிபுரிதல் (குறிப்பாக தனிநபர்கள் நிதித் துறை போன்ற முக்கியமான வணிகச் செயல்பாட்டில் இருந்தால்).
(b) வெளிப்புற ஆணைகள் மற்றும் வெளிப்புற ஈடுபாடுகள்	- MAS போட்டியாளர், வாடிக்கையாளர் அல்லது விநியோகஸ்தர்கள், பணிப்பாளர்கள் குழுவில் பணியாற்றுதல்; MAS உடன் போட்டியிடும் உங்கள் சொந்த வணிகத்தை நடத்துதல். - MAS வாடிக்கையாளர், விநியோகஸ்தர் அல்லது போட்டியாளருடன் எந்தவிதமான ஊதியம் பெறப்படும் அல்லது பெறப்படாத ஈடுபாடு, அது MAS வணிக நோக்கத்தை பூர்த்தி செய்யாத வரை, அல்லது வேறு எந்த நபர் அல்லது நிறுவனத்துடனும் பணியாளரின் செயல்திறன் மற்றும் MASக்கான பங்களிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஊதியம் பெறப்படும் அல்லது பெறப்படாத ஈடுபாடு.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

	– MAS வாடிக்கையாளர், விநியோகஸ்தர் அல்லது போட்டியாளருக்கான ஆலோசனை.
(c) தனிப்பட்ட நிதி நலன்கள்	பணியாளர்கள் செய்யக்கூடாதது – MAS உடன் போட்டியிடும் அல்லது வணிகம் செய்யும் எந்தவொரு நிறுவனத்திலும் 1% க்கு சமமான அல்லது அதற்கு அதிகமான பங்கை வைத்திருத்தல். – அவர்களுக்கு கணிசமான ஆர்வம் உள்ள அல்லது அவர்கள் கணிசமான தொடர்பைக் கொண்ட எந்தவொரு நிறுவனத்துடனும் MAS வணிகத்தை நடத்துதல். – MAS மீது ஒழுங்குமுறை அல்லது மேற்பார்வை அதிகாரம் கொண்ட எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் அதிகாரியாக அல்லது ஆலோசகராக செயல்படுதல்.
(d) கட்டணங்கள், கமிஷன்கள், தள்ளுபடிகள், பரிசுகள், பொழுதுபோக்கு, சேவைகள், பிற உதவிகள்	ஊழியர்கள், MAS நிறுவனத்தின் பரிசு கொள்கையைப் பின்பற்றும் சூழ்நிலைகளைத் தவிர, எந்தவொரு தற்போதைய அல்லது சாத்தியமான MAS பங்குதாரரிடமிருந்தும் (வாடிக்கையாளர், வழங்குநர் அல்லது போட்டியாளர் உள்ளிட்டவர்களிடமிருந்து, ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்) கட்டணம், கமிஷன், தள்ளுபடி, பரிசு, விருந்தோம்பல், சேவை அல்லது பிற சலுகைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கோரவோ, வழங்கவோ அல்லது பெறவோ கூடாது.
(e) அரசியல் நடவடிக்கைகள்	அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான வழிகாட்டல்களுக்கு **"Elections & Electioneering Policy"** ஐப் பார்க்கவும்.
(f) சொத்து நிர்வாகம் அல்லது அறக்கட்டளையில்	MAS நிறுவனத்தின் மதிப்புகள் அல்லது நலன்களுக்கு போட்டியாக அல்லது எதிராகச் செயல்படும் ஒரு அறக்கட்டளை அல்லது சொத்து நிர்வாகத்தில், ஊழியர் பயனாளி, பிரதிநிதி அல்லது நம்பிக்கையாளர் என்ற வகையில் ஈடுபடக் கூடாது.

4.0 நலன் முரண்பாடு கொள்கையை கையாளுதல்

4.1 MAS பணியாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை மதிக்கிறது மற்றும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிட விரும்பவில்லை. எவ்வாறாயினும், பணியாளர்கள் நலன் முரண்பாடுகளைத் தவிர்ப்பது, எங்கள் வணிகத்தின் ஒருமைப்பாடு மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதில் ஒரு முக்கிய பகுதியாகும், மேலும் சகஊழியர்கள் மற்றும் எங்கள் முக்கிய பங்குதாரர்களிடையே நம்பிக்கையையும் ஆதரவையும் உருவாக்குகிறது. நலன்களுக்கு இடையேயான முரண்பாடு எழும்போதெல்லாம் MAS அத்தகைய முரண்பாட்டைக் கையாள மூன்று விதி அணுகுமுறையை ஏற்றுக்கொள்கிறது.

a. வெளிப்படுத்தல்

நலன்களுக்கு இடையேயான கொள்கை முரண்பாடு பற்றிய முக்கிய தகவலை நீங்கள் உடனடியாக வெளியிட வேண்டும் (தயவுசெய்து நிலையான வெளிப்படுத்தல் படிவம் இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)

b. சம்மதம்

குறிப்பிட்ட சூழ்நிலையில் ஈடுபடுவதற்கு முன், சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரதிநிதியின் முறையான எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெற வேண்டும். வெளிப்படுத்த வேண்டிய மற்றும் ஒப்புதல் பெறப்பட வேண்டிய தரப்பினர் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

முரண்பாடுகளின் வகை	கூடுதல் வழிகாட்டுதலுக்கான தொடர்புகள்
தனிப்பட்ட பணியிட உறவுகள்	வரி (LINE) முகாமையாளர்
வெளிப்புற ஆணைகள்	வரி (LINE) முகாமையாளர்
வேலை உட்பட வெளிப்புற ஈடுபாடுகள்	வரி (LINE) முகாமையாளர்
தனிப்பட்ட நிதி நலன்கள்	SBU Code அதிகாரி
வணிக பங்குதாரர்கள் மற்றும் போட்டியாளர்களுடனான உறவுகள்	SBU Code அதிகாரி
பரிசுகள், உணவு, பயணம், பொழுதுபோக்கு	SBU Code அதிகாரி பெறப்படும் அல்லது வழங்கப்படும் அனைத்து பரிசுகளும் MAS Gift Registry இல் பதிவு செய்யப்பட வேண்டும்.
கட்டணம், சேவைகள், கமிஷன்கள், பிற உதவிகள்	SBU Code அதிகாரி

c. நெறிமுறை

வெளிப்படுத்தலுக்குப் பிறகு, தொடர்புடைய தரப்பினர் இதில் அடங்கியுள்ள நெறிமுறைகளை வெளியிடுவார்கள் ஆனால் இந்த நெறிமுறைகள் இவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டவை எனக் கருதக்கூடாது. முரண்பாட்டில் இருந்து முழுமையாக விலகுதல்

(i) முரண்பாட்டில் இருந்து ஓரளவு விலகுவதற்கு குறிப்பிட்ட காலம் கொடுக்கப்பட்டுள்ளது
(ii) தேவையான நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்புகளுடன் தொடருதல்

5.0 இணக்கமின்மை

5.1 பின்வரும் செயல்கள் மற்றும் கொள்கைக்கு இணங்காதவிடத்து ஒழுகாற்று நடவடிக்கைக்கு வழிவகுக்கும்:

(a) கொள்கை முரண்பாட்டை வெளிப்படுத்தாமை இடையேயான கொள்கை முரண்பாட்டை வெளிப்படுத்துவதில் தோல்வி
(b நலன்களுக்கு இடையேயான கொள்கை முரண்பாட்டில் ஈடுபடுவது மற்றும் MAS இன் சிறந்த நலனுக்காக செயல்படாதது
(c) நலன்களுக்கு முரண்படுவது தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறுதல்
d) நலன்களுக்கு இடையேயான கொள்கை முரண்பாடு பற்றிய விசாரணைகளில் பங்கேற்காமை அல்லது ஒத்துழைப்பு வழங்காமை
(e) நலன்களுக்கு இடையேயான கொள்கை முரண்பாட்டு சூழ்நிலையைப் புகாரளிக்காமை
(f) இணக்கமின்மை தொடர்பில் புகார் செய்பவர்களுக்கு எதிராக பழிவாங்கல் மற்றும் பழிவாங்களை ஆதரிக்கும் செயல்பாட்டில் ஈடுபடுதல்
(g) நலன் முரண்பாடு தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட பரிந்துரைகள், நெறிமுறைகள் அல்லது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்றத் தவறுதல்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

5.2 பின்வரும் வழிகளின் மூலம் அல்லது முறைகளின் மூலம் கொள்கைக்கு இணங்கவில்லை எனப் புகாரளிக்கவும்.

a) உங்கள் SBU, பிரிவு அல்லது குழு ஒழுங்குமுறை அதிகாரி அல்லது மனிதவள பிரதிநிதியிடம் பேசுங்கள்.
b) DNA ஹெல்ப் டெஸ்க் மூலம் அல்லது DNA Hotline மூலம் புகார் அளிக்கவும்.
- masdnahelpdesk.ethicspoint.com இல் உள்நுழைக

5.3 எந்த சூழ்நிலையிலும் புகார்கள் நிராகரிக்கப்பட மாட்டாது அல்லது குறைத்து மதிப்பிடப்பட மாட்டாது. மத்திய MAS DNA குழு, அந்தந்த Code அதிகாரிகள், மனிதவள மற்றும் பிற பொறுப்புக் கூறும் தரப்பினர் புகாரின் பதிவு மற்றும் விசாரணையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரின் இரகசியத்தன்மையைப் பேணுவார்கள்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

5.4 மத்திய MAS DNA குழுவின் உறுப்பினர், அந்தந்த Code அதிகாரிகள் அல்லது மனிதவள பிரதிநிதி உங்களைத் தொடர்பு கொண்டால், வெளிப்படையான, நேர்மையான மற்றும் இரகசியத்தன்மையைப் பேணுவதன் மூலம் தொடர்ந்து விசாரணைகளுக்கு உதவுவது உங்கள் பொறுப்பாகும்.

5.5 ஒரு தனிநபருக்கு எதிராகச் செயற்படுவது/புகார் பதிவு செய்ய முயற்சிப்பது, பாதிக்கப்பட்டவரை ஆதரிப்பது அல்லது விசாரணையில் பங்கேற்பது MAS DNA (நடத்தை நெறிமுறை) மற்றும் கொள்கைக்கு இணங்காததற்கு நிகராகும்.

5.6 நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தவறான நோக்கத்துடன் ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுகளைப் புகாரளிப்பது MAS DNA-க்கு இணங்காததற்கு நிகராகும்.

5.7 MAS விளைவு முகாமைத்துவக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், மத்திய MAS DNA குழு, சம்பந்தப்பட்ட Code அதிகாரிகள் அல்லது மனிதவதளத்தின் மூலம் கையாளப்படும். MAS கொள்கைகளுக்கு கட்டுப்படாது Mas கொள்கைகளை மீறியதாகக் கண்டறியப்பட்ட நபர்கள் பணிநீக்கம் உட்பட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

6.0 பொறுப்பு

கட்சியின் பொறுப்பு	செயற்பாடுகள்
MAS ஆடையக சபை	ஒப்புதல் மற்றும் கையொப்பம்
பணிப்பாளர் - MAS குழு மனித வளம்	உரிமை மற்றும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமை
Code அதிகாரிகள்	**இணக்கத்தை கண்காணிக்கவும்** • அந்தந்த யூனிட் கொள்கைக்கு இணங்குவதை உறுதிசெய்து, தேவைப்பட்டால் மேலும் ஆதரவை வழங்கவும் • ஏதேனும் சாத்தியமான கொள்கை முரண்பாட்டு சூழ்நிலையை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தைத் தொடர்புகொண்டு வலியுறுத்தவும், அதற்கேற்ப தேவையானதை அவர்கள் செய்வதை உறுதி செய்யவும் • நலன்களையொட்டிய சூழ்நிலைகளின் முரண்பாடுகள் பதிவு செய்யப்பட்டு ஒரு நிலையான வெளிப்படுத்தல் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்யவும் • இது போன்ற சூழ்நிலைகள் வெளிப்படுத்தப்படும் போது, முன்னோக்கி செல்லும் வழி அல்லது சூழ்நிலைகளை நிர்வகிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு உரையாடலை உறுதி செய்யவும். **இணக்கமின்மையை நிர்வகிக்கவும்** • அனைத்து மீறல்களையும் சரியான நேரத்தில் பதிவுசெய்து அதன் நிலையை விசாரிக்கவும்

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

	நிலைபேறான தன்மை • மத்திய DNA குழு வழங்கிய வளங்களை பயன்படுத்துவதன் மூலம், நலன்களுக்கு இடையேயான கொள்கையின் முரண்பாட்டில் தொடர்புடைய பிரிவுகளுக்குள் தொடர்ந்து தொடர்புகொள்வதையும், கல்வி அமர்வுகளை நடத்துவதையும் உறுதிசெய்யவும். • புதிதாக பணியமர்த்தப்பட்டவர்கள் பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் கொள்கையை கடைபிடிப்பதன் முக்கியத்துவம் பற்றிய கட்டாயக் கல்வியைப் பெறுவதை உறுதிசெய்ய மனிதவள பிரிவுடன் பணியாற்றுங்கள் • மனிதவள குழு உடன் தொடர்பு கொள்ளவும், கொள்கை மற்றும் செயல்முறை பற்றிய கருத்துகளை policyinfo@masholdings.com மூலம் வழங்குவதை வழக்கமாகக் கொள்ளவும்.
வரி முகாமையாளர்	**கல்வி கற்பித்தல்** • நலன்களுக்கு இடையேயான கொள்கை குறித்து உங்கள் குழுவிற்குக் கற்பித்தல் **கடைபிடித்தல்** • உங்கள் குழு கொள்கையுடன் ஒத்துப்போகிறது என்பதை அறிந்திருப்பதை உறுதிசெய்யவும் • உங்கள் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஏற்கனவே உள்ள / சாத்தியமான கொள்கை முரண்பாடு சூழ்நிலையை வெளிப்படுத்துவதை உறுதி செய்யவும் • வெளிப்படுத்தல் செயல்பாட்டில் கூடுதல் உதவி அல்லது வழிகாட்டுதலை வசழங்கவும் **கலந்துரையாடவும்** • கொள்கையை கடைபிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் குழுவுடன் ஆண்டு நடுப்பகுதியில் கலந்துரையாடல் செய்யுங்கள் • உங்கள் குழுவில் இருந்து வரும் நலன்களுக்கு இடையேயான கொள்கையின் முரண்பாடுகள் வெளிப்படும் போது, முன்னோக்கி செல்லும் வழி அல்லது சூழ்நிலையை/களை நிர்வகிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு உரையாடலை உறுதிசெய்யவும். **இணக்கமின்மையை நிர்வகிக்கவும்** • ஏற்கனவே உள்ள அல்லது ஏற்படக்கூடிய நலன் முரண்பாட்டு சூழ்நிலையை நீங்கள் கவனித்தாலோ அல்லது அதுகுறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டாலோ, அதனை உடனடியாக சம்பந்தப்பட்ட SBU / பிரிவு / குழு ஒழுக்கநெறி அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரவும் அல்லது DNA உதவி மையத்தின் (Help Desk) மூலம் தெரிவிக்கவும்.
பணியாளர்கள் / ஆலோசகர்கள்	**கடைபிடித்தல்** • நலன்களுக்கு இடையேயான கொள்கையயை படிக்கவும், புரிந்து கொள்ளவும் மற்றும் இணங்கவும். • நிலையான வெளிப்படுத்தல் படிவத்துடன் ஏற்கனவே உள்ள / சாத்தியமான முரண்பாடுகளை வெளிப்படுத்துவதை உறுதிசெய்து, அதை உங்கள் code officer சமர்ப்பிக்கவும் **இணக்கமின்மையை நிர்வகித்தல்** • ஒரு SBU/ பிரிவு/ குழுக் code officer அல்லது DNA உதவி மையத்தின் மூலம் நலன்களுக்கு இடையேயான கொள்கைக்கு இணங்காத எந்தவொரு செயலையும் புகாரளிக்கவும். • நடந்துகொண்டிருக்கும் விசாரணையை ஆதரிக்கும்படி உங்களிடம் கேட்கப்பட்டால்; திறம்பட விசாரணை நடத்த வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்பதுடன், நேர்மையான மற்றும் இரகசியத்தன்மையை பேண வேண்டும் • கொள்கை தொடர்பாக சந்தேகம் இருந்தால், மனிதவள குழுவின் policyinfo@masholdings.com ஐ தொடர்பு கொள்ளவும்

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

விநியோகஸ்தர்கள் (Suppliers), பார்வையாளர்கள் (Visitors) மற்றும் பிற மூன்றாம் தரப்பினரும் இந்த நலன் முரண்பாடு கொள்கை கொள்கைக்கு இணங்காததாக கருதப்படும் எந்தவொரு செயல்பாட்டையும் புகாரளிக்கலாம்.

7.0 முக்கிய விதிமுறைகளின் வரைவிளக்கங்கள்

ஆலோசகர்கள்	வெளி ஆலோசகர்கள், நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்
பணியாளர்கள்	MAS உடன் ஒப்பந்த விதிமுறைகள் அல்லது நியமனக் கடிதங்களின் கீழ் ஈடுபட்டுள்ள அனைத்து நிரந்தர (முழுநேர மற்றும் பகுதிநேர) மற்றும் நிரந்தரமற்ற பணியாளர்கள், ஆலோசகர்கள், பயிற்சியாளர்கள் (Trainees), பயிலுநர்கள் (Interns) மற்றும் பிற பணியாளர்கள்.
நெறுங்கிய குடும்ப உறுப்பினர்கள்	மனைவி/கணவர் அல்லது துணைவர், பெற்றோர், உடன்பிறந்தவர்கள் மற்றும் அவர்களது துணைவர்கள், குழந்தைகள் மற்றும் அவர்களது துணைவர்கள்
MAS	MAS ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சி நிறுவனங்கள்
நபர் அல்லது நபர்கள்	ஊழியர்கள், ஆலோசகர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர்.
மூன்றாம் தரப்பினர்	MAS வளாகத்திற்கு வரும் அனைத்து வணிக மற்றும் தனிப்பட்ட பார்வையாளர்கள், கூட்டு முயற்சி பங்குதாரர்கள், அனைத்து நேரடி மற்றும் மறைமுக சேவை வழங்குநர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் MAS உடன் தொடர்பு கொள்ளும் முகவர்கள் MAS உடனான தங்கள் உறவின் போது, MAS க்கு சொந்தமான தகவல்களுக்கான அணுகல் வழங்கப்பட்டுள்ளது.
கணிசமான பங்குரிமை	ஒரு நிறுவனத்தில் 1% அல்லது அதற்கு மேற்பட்ட உரிமை அல்லது பங்கைக் கொண்டிருப்பது, அல்லது அந்த நிறுவனத்திற்காக ஆலோசனை, நிர்வாகம், வழிகாட்டல் அல்லது ஏதேனும் சேவைகளை வழங்குவது **"கணிசமான பங்குரிமை (Substantial Interest)"** எனக் கருதப்படும்.

தொடர்புகளுக்கு

கொள்கை தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து உங்கள் SUB, பிரிவு அல்லது குழு Code அலுவலர்கள் அல்லது DNA உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்!

DNA உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளவும் - Call_____ தமிழ் மூலம் _____ டயல் செய்யவும்.

masdnahelpdesk.ethicspoint.com இல் பிரவேசிக்கவும்

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

கொள்கையின் பெயர்	நலன் முரண்பாடு கொள்கை
கொள்கையின் உரிமையாளர்	பணிப்பாளர் - மனித வளங்கள் குழு
கொள்கை தினம்	ஜூலை 2018
ஒப்புதல் வழங்கல்	MAS ஆடையகச் சபை
இறுதி மதிப்பாய்வு தினம்	மார்ச் 2025

MAS
CHANGE IS COURAGE

இணைப்பு 1

நிலையான வெளிப்படுத்தல் படிவம்

நேர்மை மற்றும் ஒருமைப்பாடு மற்றும் அதன் நடத்தை விதிகளின் MAS மதிப்பை நிலைநிறுத்துவதில், MAS 'நலன்கள் தொடர்பான மோதல்' கொள்கையை ஏற்றுக்கொள்கிறது. MAS இன் அளவு மற்றும் இயல்பைக் கொண்ட ஒரு நிறுவனத்தில், சாத்தியமான நலன்கள் தொடர்பான முரண்பாடுகளின் சூழ்நிலைகளை நாம் சந்திக்க நேரிடலாம். அத்தகைய சூழ்நிலைகள் அனைத்தும் உண்மையான நலன்கள் தொடர்பான மோதல்களுக்கு வழிவகுக்காது மற்றும் அவ்வாறானவை ஏற்றுக்கொள்ள முடியாதவை அல்லது தவறானவை அல்ல. எவ்வாறாயினும், MAS இன் நம்பகத்தன்மையையும் அதன் பங்குதாரர்களுடனான ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்காக இத்தகைய சூழ்நிலைகளை நிர்வகிப்பதில் வெளிப்படைத்தன்மை அவசியமாகும்.

MAS இல், நலன்கள் தொடர்பான முரண்பாடுகளை நிர்வகிக்கும் போது 'வெளிப்படுத்துதல், ஒப்புதல் மற்றும் நெறிமுறை' என்ற மூன்று விதி அணுகுமுறையை நாங்கள் பின்பற்றுகிறோம். வெளிப்படுத்தல் விதிக்கு ஏற்ப, நிலையான வெளிப்படுத்தல் படிவத்தை ஆண்டுதோறும் தாக்கல் செய்வது MAS பணியாளராக உங்களைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் நெறிமுறை வணிகத்தை நடத்துவதற்கு MAS ஐ ஆதரிப்பதாக அமையும்.

தனிப்பட்ட நன்மை என்பது நிதி ஆதாயத்துடன் மட்டுப்படுத்தப்படாமல், தொழில்முறை முன்னேற்றத்திற்கான விருப்பம் அல்லது குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு உதவி செய்ய விரும்புவது போன்ற நோக்கங்களையும் கொண்டுள்ளது.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

கொள்கையின் பெயர்	நலன் முரண்பாடு கொள்கை
கொள்கையின் உரிமையாளர்	பணிப்பாளர் - மனித வளங்கள் குழு
கொள்கை தினம்	ஜூலை 2018
ஒப்புதல் வழங்கல்	MAS ஆடையகச் சபை
இறுதி மதிப்பாய்வு தினம்	மார்ச் 2025

MAS
CHANGE IS COURAGE

பகுதி 1 - பணியாற்றுபவரின் தனிப்பட்ட விபரங்கள்

பணியாற்றுபவரின் பெயர்	
EPF எண்	
பதவி	
பிரிவு / SBU	
திணைக்களம் (DEPARTMENT)	
EMAIL	
தொலைபேசி எண்	

பகுதி 2 - வெளிப்படுத்துதல்

பின்வரும் சூழ்நிலைகளில் எனது ஈடுபாட்டை வெளிப்படுத்த விரும்புகிறேன் (பொருத்தமான கட்டம் அல்லது கட்டங்களை தெரிவு செய்யவும்):

(A) ☐ நான் எனது சொந்த வியாபாரத்தை நடத்துகிறேன் / நான் பகுவேலையில் ஈடுபடுகிறேன்

(B) ☐ எனக்கு வேறொரு வணிகத்தில் வணிக ஆர்வம் உள்ளது (பணிப்பாளர், பங்குகளில் முதலீடு செய்தல் போன்றவை)

(C) ☐ நான் வெளியில் வேறொரு நிறுவனத்தில் (சம்பளம் பெறப்படும்/பெறப்படாத) பணியை செய்கிறேன்

(D) ☐ எனக்கு மனைவி / கணவன் / நெறுங்கிய குடும்ப உறுப்பினர் அல்லது MAS இல் பணிபுரிகின்ற ஒருவருடன் நெருங்கிய தொடர்பு உள்ளது

(E) ☐ MAS சார்பாக எனது மனைவி / பங்குதாரர் / நெறுங்கிய குடும்ப உறுப்பினர் / நான் நெருங்கிய தனிப்பட்ட உறவில் உள்ள ஒருவருடன் வணிக பரிவர்த்தனைகளை மேற்கொள்கின்றேன்

(F) ☐ நான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறேன்

(G) ☐ ஏனையவை

*நெறுங்கிய குடும்ப உறுப்பினர்கள் என்பது பெற்றோர், உடன்பிறந்தவர்கள் மற்றும் குழந்தைகளைக் குறிக்கும்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

பகுதி 3 - வெளிப்படுத்தல் பற்றிய விவரங்கள்

***நீங்கள் A, B, C மற்றும்/அல்லது F பெட்டிகளைத் தேர்ந்தெடுத்திருந்தால், பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும் (Q1 - Q5);**

1. **அமைப்பின் அல்லது நிறுவனத்தின் பெயர் அல்லது பெயர்கள் மற்றும் முகவரியை வழங்கவும்.**

2. **நிறுவனத்திற்காக நீங்கள் ஆற்றும் கடமைகளை விவரிக்கவும்.**

3. **நிறுவனத்துடனான உங்கள் ஈடுபாடு எவ்வளவு காலம் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?**

   ☐ குறுகிய கால (01 - 12 மாதங்கள்)
   ☐ நடுத்தர கால (01 - 03 ஆண்டுகள்)
   ☐ நீண்ட கால (3 ஆண்டுகளுக்கு மேல்)

4. **வாரத்திற்கு சராசரியாக எத்தனை நாட்கள், நிறுவனத்திற்கான கடமைகளைச் செய்யச் செலவிடுவீர்கள்?**

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

5. **உங்களுக்குத் தெரிந்த வரையில் அவ் அமைப்பின் கடமைகளுக்காக நீங்கள் ஏதேனும் MAS இன் வளங்களை அல்லது நேரத்தைப் பயன்படுத்துகிறீர்களா? ஆம் எனில், விவரிக்கவும்.**

* **D மற்றும்/அல்லது E கட்டங்களை தெரிவு செய்திருந்தால் பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்**

6. **அமைப்பு அல்லது கட்சிகளின் பெயர்களை வழங்கவும்.**

7. **மேலே குறிப்பிடப்பட்ட அமைப்பு அல்லது கட்சிகளுடன் நீங்கள் எவ்வாறான உறவினை கொண்டுள்ளீர்கள்?**

8. **நீங்கள் D என்ற கட்டத்தைத் தெரிவு செய்திருந்தால், பிரிவு / SBU, துறை மற்றும் உங்கள் மனைவி/கணவன்/குடும்ப உறுப்பினர்/உங்களுடன் நெருங்கிய தனிப்பட்ட உறவில் உள்ள ஒருவர் செய்த பணி செயல்பாடு ஆகியவற்றை வழங்கவும்.**

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

9. **E என்ற கட்டத்தைத் தெரிவு செய்திருந்தால், MAS சார்பாக வணிகப் பரிவர்த்தனை மற்றும் அதில் உங்கள் ஈடுபாட்டை விவரிக்கவும்.**

10. **நீங்கள் G என்ற கட்டத்தைத் தெரிவு செய்திருந்தால் தயவுசெய்து சூழ்நிலையின் விவரங்களை விவரிக்கவும்.**

11. **சந்தர்ப சூழ்நிலையை நிர்வகிப்பதில் பயனுள்ளதாக இருக்கும் என நீங்கள் நினைக்கும் கூடுதல் தகவலை எங்களுக்கு வழங்கவும்.**

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

கொள்கையின் பெயர்	நலன் முரண்பாடு கொள்கை
கொள்கையின் உரிமையாளர்	பணிப்பாளர் - மனித வளங்கள் குழு
கொள்கை தினம்	ஜூலை 2018
ஒப்புதல் வழங்கல்	MAS ஆடையகச் சபை
இறுதி மதிப்பாய்வு தினம்	மார்ச் 2025

MAS
CHANGE IS COURAGE

பகுதி 4 - லைன் முகாமையாளர் / (CODE OFFICER) CODE அதிகாரியின் ஒப்புதல்

எனது கருத்தின்படி வழங்கப்பட்ட விவரங்கள் (பொருத்தமான கட்டத்தைத் தெரிவுசெய்க):

☐ அபிலாஷைகள் தொடர்பான முரண்பாடுகள் இல்லை, மேலும் செயல்பாட்டைத் தொடர பணியாளரை நான் அங்கீகரிக்கிறேன்.

☐ அபிலாஷைகள் தொடர்பான முரண்பாடுகள் உள்ளதா (தெரிவு செய்யப்பட்டிருந்தால், விரிவான செயல் திட்டத்தை கீழே வழங்கவும்)

நிலைமை நலன்களோடு முரண்படுவதாக இருந்தால், பின்வரும் விருப்பங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

- முரண்பாடுகளைச் சுற்றியுள்ள அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல்
- முரண்பாடுகளில் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியப்படுத்துதல், அவர்கள் ஆட்சேபிக்கிறார்களா என்பதைப் பற்றிய அவர்களின் கருத்துக்களைத் தேடுதல்
- உள்ளக முகாமைத்துவ ஏற்பாடுகள் மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்துதல்
- டெண்டர்கள் தொடர்பாக ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு மத்திய MAS DNA குழு அல்லது குழு மனிதவள பிரிடம் ஆலோசனை பெறல்
- நபரின் பணியின் நோக்கத்தை மறுசீரமைத்தல் அல்லது குறிப்பிட்ட தகவலுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துதல்
- முரண்பாட்டை ஏற்படுத்தும் நலன்களை கைவிடுதல்
- நபரை அவர்களின் தற்போதைய கடமைகளில் இருந்து நீக்குதல் அல்லது அவரை வேறு பணிக்கு மாற்றுதல்
- நலன்கள் தொடர்பான மோதலினால் நபரின் செயல்பாடுகளை நெருக்கமாகக் கண்காணித்தல்
- முரண்பாடு குறைவாக இருப்பதால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம்

நான் மேலே உள்ள பரிசீலனைகளை மதிப்பாய்வு செய்துள்ளேன். எனவே மோதலை அகற்ற அல்லது நிர்வகிக்க பணியாளரிடம் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்:

மேலே உள்ள செயல்திட்டம் மதிப்பாய்வு செய்யப்படுவதை நான் உறுதி செய்வேன்;

☐ 01 மாதம்
☐ 03 மாதங்கள்
☐ 06 மாதங்கள்
☐ 12 மாதங்கள்
☐ N/A எனப்படுவது மோதலானது குறுகிய கால இடைவெளியில் ஒன்றாகும்

© Copyright 2018 MAS Holdings (Private) Limited

பிரிவு 4 இல் விவரிக்கப்பட்டுள்ள அணுகுமுறையின் செயற்பாடுகள், பிரிவு 2 மற்றும் 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு நலன்கள் தொடர்பான முரண்பாட்டையும் திறம்பட நிர்வகிக்கின்றது. பிரிவு 4 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அணுகுமுறை MAS இன் வணிக நலன்கள் மற்றும் நற்பெயரினை போதுமான அளவு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்றது.

லைன் முகாமையாளர் / code அதிகாரி பெயர் **(LINE MANAGER / CODE OFFICER NAME)**	
கையொப்பம்	
திகதி	

பகுதி 5 - பணியாளரால் வெளிப்படுத்தப்படுவதற்கான கையொப்பம்

கீழே தரப்பட்டுள்ள கூற்றை நன்றாக வாசித்து கையொப்பமிடுங்கள்:

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானது மற்றும் முழுமையானது என்றும், MAS நடத்தை விதிகள் மற்றும் நலன்கள் தொடர்பான முரண்பாடு குறித்த மனிதவளக் கொள்கையைப் படித்து புரிந்துகொண்டு இணங்க ஒப்புக்கொள்கிறேன் என்றும் இதன்மூலம் உறுதியளிக்கிறேன். எதிர்வரும் ஆண்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் குறிப்பிடுவது தொடர்பான அவசியம் ஏற்படின் மற்றொரு வெளிப்படுத்தல் படிவத்தைச் சமர்ப்பிப்பேன் என இதன் மூலம் நான் உறுதியளிக்கிறேன். எந்தவொரு நலன்கள் தொடர்பான முரண்பாட்டையும் அகற்ற அல்லது நிர்வகிப்பதற்கான இந்தப் படிவத்தில் அடையாளம் காணப்பட்ட எந்தவொரு நெறிமுறைக்கும் இணங்க ஒப்புக்கொள்கிறேன். தகவல் தவறானது என்று பின்னர் கண்டறியப்பட்டால், நான் ஒழுக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படலாம் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். HR04 - நலன்கள் தொடர்பான கொள்கையின் முரண்பாடு மற்றும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் விவரிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் படிவத்தைப் பயன்படுத்துவதற்கு எனது ஒப்புதலை அளிக்கிறேன்..

பணியாளரின் கையொப்பம்	
திகதி	

முடிந்ததும், அசல் படிவத்தை கோப்பில் வைத்திருக்க லைன் முகாமையாளர் (Line Manager) அல்லது SBU / பிரிவின் code அதிகாரியிடம் (SBU / Divisional Code Officer) திருப்பி அனுப்ப வேண்டும்.

© Copyright 2018 MAS Holdings (Private) Limited